மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) & (இ) ஆம், வேலூரிலுள்ள சிறப்பு, மாவட்ட விவசாய அலுவலர் (வாழை) இதற்கான திட்டக் குறிப்பை அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். அக்குறிப்பு கிடைத்ததும், மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

Adayar foot bridge.

* 288 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether it is a fact that the foot bridge over Adayar river linking the Elliots Beach with Foreshore Estate had cracked on 1st December 1969;

(b) if so, the details thereof;

(c) the total amount spent for the construction of the original bridge; and

(d) the estimated cost of reconstruction of the bridge?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) அடையாற்றின் மேலுள்ள நடை பாலம் 20—11—1969 இரவு பழுதடைந்தது.

(இ) நடைபாலத்தில் உள்ள 17 கண்வாய்களில் 3 கண்வாய்கள்தான் நீரை வெளியேற்றிக்கொண்டிருந்தன. மற்றவைகள் மணல்திட்டினால் மூடப் பட்டுவிட்டன. அதிக மழைபெய்ததாலும் தண்ணீர் வெளியேற்றுவதற்கு இடம் குறைந்ததாலும் ஏற்பட்ட நீர்ச்சுழலினால் வடக்குப் பக்கத்திலிருந்து 9-வது தாங்குச் சுவரின் அடிப்பாகம் அரிக்கப்பட்டு 4 அடி 3 அங்குலம் ஆழத் திற்கு தண்ணீரில் மூழ்கிவிட்டது. தாங்குச் சுவரின்மேல் பொருத்தப்பட் டிருந்த விட்டமும் தண்ணீரில் அமிழ்ந்துவிட்டது.

(உ) ரூபாய் 5,92,539-13.

(எ) ரூபாய் 19,450.

DR. H. V. HANDE : May I know whether reconstruction is over? If so, may I know the date on which the repair was made?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : 10—4—1970-இல் செப்பனிடும் வேலை நடந்து முடிவடைந்துவிட்டது.

Electricity supplied to agriculturists in Thiruchiroppall district.

* 289 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether the Government are aware that the South Madras Electric Supply Corporation, Tiruchirappalli is charging Rs. 0-12½ per unit for the Electricity supplied to the agriculturists of Tiruchirapalli; and

(b) if so, whether the Government have any proposal to instruct the Corporation to reduce the charges?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) இல்லை.